(இ) அதற்கு ஆய்வு ((Investigation)) செய்ய செலவு செய்யப் பட்ட தொகை எவ்வளவு?

(உ) இப்போது அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) திருச்சி மாவட்டத்தில் உள்ள எல்லா சிறப்பு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான ஆய்வுச் செலவுகள் ஒரே பொது மதிப்பீட்டின் கீழ் கொண்டு வந்ததால் மருதையாறு நீர்ப்பாசன ஆய்வுத் திட்டச் செலவு எவ்வளவு என்று தனியே மதிப்பிடப்படவில்லை.

(உ) மருதையாற்று நீரில் சோடியம்குளோரைடு போன்ற உப்புக்கள் அதிகமாக கலந்திருப்பதினாலும், பாசனத்திற்குத் தகுதியற்றதாக முடிவு செய்யப்பட்டதினாலும் கைவிடப்பட்டது.

பெரியபாளையத்தில் மேம்பாலம்

* 528 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையம் தரைப்பாலத்தில் வெள்ளம் வரும் போது போக்குவரத்து பாதிக்கப்படுவதால், மேம்பாலம் கட்ட திட்டம் ஏதே னும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: பெருவழித் துறையைச் சேர்ந்த இந்த தரைப் பாலம் ஆரணியாற்றின் மேல் அமைந்திருக்கிறது. இதில் அதிகப் போக்கு வரத்து இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அரசு போக்குவரத்து பஸ்களும், வண்டிகளும் வெள்ளம்வரும்போது கவிழ்ந்து மூழ்கி விடுகின்றன. அப்போது போர் நெருக்கடி காரணமாக தரைப்பாலமாக இருப்பதை மேம்பாலமாகக் கட்ட முடியாது என்று கூறினார்கள். இப்போது நெருக்கடி நீங்கிற சூழ் நிலையில் இப்போதாவது இது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மீண்டும் நெருக்கடி ஏற்பட்டி ருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். 1971-72-ல் பார்ட் 2 ஸ்கீமில் சேர்க்கப்பட்டு நிதிநிலை நெருக்கடி காரணமாக எடுத்துக்கொள்ளப் படவில்லை. அது இப்போது பார்ட் 2 ப்ரொபோசலில் சேர்த்துக் கொள்ளப் படும்.

அன்னப்பநாய்க்கன் குப்பம் அணைக்கட்டு நீர்

* 529 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொன்னேரி வட்டம், அன்னப்ப நாய்க்கன் குப்பம் அணைக்கட்டு நீரை கும்மிடிப்பூண்டி கீசா ஏரிக்கு வருமாறு செய்யத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

1971 டிசம்பர் 17]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : மேற்கண்ட அணைக்கட்டு கும்மிடிப் பூண்டி தொகுதியில் இருக்கிறது. இந்த அணைக்குப் பக்கத்தில் கிசா ஏரி இருக்கிறது. அந்த அணைக்கட்டிலிருந்து 20 ஏரிகளுக்குத் தண்ணீர் வருகின்ற நிலை இருக்கிறது. ஆனால் கிசா ஏரிக்குத் தண்ணீர் வர வழி இல்லை. மக்கள் அதை மிகவும் எதிர்பார்க்கிறார்கள். இப்போதாவது கிசா ஏரியை இணைக்கின்ற திட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : கும்மிடிப்பூண்டியில் இருக்கும் கிசா ஏரிக்கு நீர்ப்பாசனத்திற்காகத் தண்ணீர் அளிக்க தற்சமயம் காரணம் இல்லையென்று தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார். அணைக்கட்டின் மூலம் 20 குளங்கள் பயன் அடைவதாகச் சொன்னார்கள். பத்து குளங்கள் தான் பாசன வசதி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கும்மிடிப் பூண்டி கிசா ஏரிக்கு ஆரணியாற்றிலிருந்து தண்ணீர் வசதி பெற உரிமையில்லை. ஆரணியாற்றிலிருந்து பாசன வசதி பெறும் ஆயக்கட்டுகள் 23,310 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

கோவை வேளாண்மைக் கல்லூரியில் குடிநீர் ஆய்வு

* 530 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்கள் கோவை விவசாயக் கல்லூரியிலேயே குடிநீர் பரிசோதனை செய்துகொள்ள அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குடிநீரை ஆராய்ந்து பரிந்துரை வழங்குவது விவசாயத்துறையின் வரம்பிற்கு அப்பாற்பட்டதாகும். இதற்காக பொது சுகாதாரத் துறையின் ஆய்வுக்கூடம் ஒன்று கோயம்புத்தூர் நகரிலேயே உள்ளது. இவ்வாய்வுக் கூடம் நீலகிரி, கோவை, சேலம், தருமபுரி திருச்சி மாவட்டங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : ஊராட்சி மன்றங்கள் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்ட வேண்டுமென்றால் அதற்கு முன்னதாக அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய கிணற்றுத் தண்ணீரைக் கிண்டிக்கு அனுப்பி அவர்கள் பரிசோதித்து அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தலாம் என்று சொன்ன பிறகுதான் மேல் நிலைத் தொட்டி கட்ட முடியும். இப்போது தமிழ்நாடு முழுவதிலிருந்தும் கிண்டிக்கு வரவேண்டிய நிலை இருப்பதன் காரணமாக, கிண்டியில் தண்ணீரை ஆராய்ந்து முடிவு சொல்ல நீண்ட நாட்களை எடுத்துக் கொள்ளுவதன் காரணமாக வேலைகள் தடைப்படுகின்றன. ஆகவே, இந்த வேலைப் பளுவைக் குறைப்பதற்கு, கோவை, நீலகிரி, தருமபுரி, சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு கோவை விவசாயக் கல்லூரியில் இருக்கும் பெரிய ஆராய்ச்சி நிலையத்தைப் பயன்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நான் பயிர்ப் பாதுகாப்புக்காகச் சொன்னேன். கனம் உறுப்பினர் அவர்கள் உயிர்ப் பாதுகாப்புக்காகச் சொல்லுகிறார்கள். இது பொதுச் சுகாதாரத்துறை சம்பந்தப்பட்டது என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.